இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 12-02-2025

# எது அற்பத்தனம்?

உரிமையைக் கேட்பதை அற்பத்தனம் என்கிறார் ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல். தாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்யச் சொன்னால் அதனை துரதிஷ்டவசமானது என்கிறார் அமைச்சர் பியூஸ் கோயல். இவர்களுக்கு எடப்பாடி பழனிசாமியைப் போல தலையாட்டிக் கொண்டிருந்தால்தான் சூப்பர் என்பார்கள்.

“ஒன்றிய அரசுக்கு வரி செலுத்துவதற்கு ஏற்ப மத்திய நிதியைப் பெற வேண்டும் என்ற சில மாநிலங்களின் கோரிக்கை ‘அற்பத்தனமான சிந்தனை’ மற்றும் ‘துரதிர்ஷ்டவசமானது” என்று ஒன்றிய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் கூறியுள்ளார். “நாடு வளம் பெற வேண்டுமென்றால், பீகார், மேற்கு வங்கம், ஒடிசா மற்றும் ஜார்க்கண்ட் போன்ற எட்டு வடகிழக்கு மற்றும் கிழக்கு இந்திய மாநிலங்கள் வளர்ச்சியடைய வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கருதுகிறார்” என்று பியூஸ் கோயல் பேசி இருக்கிறார். ஏன், இவைதான் இந்தியாவில் இருக் கிறதா? தமிழ்நாடும், கேரளாவும் கர்நாடகமும் மேற்கு வங்கமும் இந்தியாவில் இல்லையா?

எங்கே இதைப் பேசி இருக்கிறார் தெரியுமா? அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ABVP) மற்றும் ‘மாநிலங்களுக்கு இடையேயான வாழ்வில் மாணவர் அனுபவம் (SEIL)’ என்ற அமைப்புகளின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘ராஷ்ட்ரிய ஏகாத்மத யாத்திரை 2025’ நிகழ்வில் இவர் இப்படி பேசி இருக்கிறார்.

“கடந்த 11 ஆண்டுகளில், மகாபாரதத்தின் அர்ஜுனனைப் போலவே, மோடி அரசாங்கத்தின் ‘லேசர் கவனம்’ வடகிழக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் இருந்தது. சில மாநிலங்களும் சில தலைவர்களும் இதை அரசியலாக்குகிறார்கள். மகாராஷ்டிராவைச் சேர்ந்த சில தலைவர்கள்... இரண்டரை ஆண்டுகளாக இருந்த முந்தைய அரசாங்கத்தின் தலைவர்கள், மும்பை மற்றும் மகாராஷ்டிரா செலுத்திய வரியைக் கணக்கிட்டு, அந்த அளவுக்கு (மத்திய நிதியை) திரும்பப் பெற வேண்டும் என்று கோருவார்கள். கர்நாடகா, தமிழ்நாடு, தெலுங்கானா போன்ற சில மாநிலங்கள் தாங்கள் செலுத்திய வரித் தொகையைத் திரும்பப் பெற வேண்டும் என்று கூறுகின்றன. இதை விட அற்பமான சிந்தனை (சோட்டி சோச்) இருக்க முடியாது. இதை விட துரதிர்ஷ்டவசமான எதுவும் இருக்க முடியாது,” என்று பேசி இருக்கிறார் பியூஸ் கோயல்.

“ஆனால் மகாராஷ்டிராவில் உள்ள தற்போதைய பா.ஜ.க. தலைமையிலான அரசாங்கம் வடகிழக்கு இந்தியாவை மிகவும் உணர்திறன் மிக்கதாக இருப்பதால் இப்போது கவலைப்படத் தேவையில்லை . கடந்த 11 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சி செய்யும் மோடி அரசு, வடகிழக்கு இந்தியாவிற்கு முன்னுரிமை அளித்து, ‘கிழக்கு நோக்கிச் செயல்படு’ மற்றும் ‘கிழக்கு நோக்கிப் பார்’ என்ற கொள்கையைப் பின்பற்றி வருகிறது. பிரதமர் மோடி 65க்கும் மேற்பட்ட முறை வடகிழக்கு மாநிலங்களுக்குச் சென்றுள்ளார். இப்பகுதியின் அழகையும் கலாச்சாரத்தையும் காண ஒரு முறையாவது அங்குச் சென்று பாருங்கள்” என்று சொல்லி இருக்கிறார் பியூஸ் கோயல்.

**ஒட்டுமொத்த இந்தியாவுக்குமான அமைச்சர் என்பதை மறந்து பேசி இருக்கிறார் அமைச்சர் பியூஸ் கோயல். வடகிழக்கு மாநிலங்களுக்கு சுற்றுலா செல்வது வேறு. யாரும் செல்லலாம். அதைக் குறை சொல்லப் போவது இல்லை. ஆனால் மொத்த இந்திய நிதி அனைத்தும் அந்த மாநிலங்களுக்குத் தான் என்று முடிவெடுக்க பியூஸ் கோயலுக்கு யார் அதிகாரம் தந்தது? அப்படி இந்த பத்தாண்டு காலத்தில் இவர்கள் சொல்லும் மாநிலங்களை எங்கே வளர்த்துள்ளார்கள்? ஏன் நடிக்கிறீர்கள்?**

அவர் சொல்லும் மாநில மக்கள் மட்டும் பா.ஜ.க.வுக்கு வாக்களித்தால் போதும், மற்றவர்கள் வாக்களிக்கத் தேவையில்லை என்று பியூஸ் சொல்வாரா?

**‘எங்கள் மாநிலத்துக்கு ஏன் நிதி தர மறுக்கிறீர்கள்?’ என்று தமிழ்நாடு முதலமைச்சர் கேட்கிறார். கேரள முதலமைச்சர் கேட்கிறார். கர்நாடக முதலமைச்சர் கேட்கிறார். மேற்கு வங்க முதலமைச்சர் கேட்கிறார். அதற்கு நேரடியாக பதில் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, அந்த மாநிலத்துக்கு அதைச் செய்கிறோம், இந்த மாநிலத்துக்கு இதைச் செய்கிறோம் என்று சொல்லி எதற்காக திசை திருப்ப வேண்டும்?**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு தரும் வரியின் அளவைச் சொல்லி அந்தளவுக்கு நிதிப் பகிர்வைக் கேட்கவில்லை. நமது மாநிலத்துக்கு தர வேண்டியதைத் தான் தாருங்கள் என்று கேட்கிறார்கள். அதைக் கூட தர மறுப்பது நியாயமா?

மக்கள் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்குவதாகச் சொல்லி, மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை முறையாகக் கடைப்பிடித்த மாநிலங்களுக்கு அநீதி இழைத்தார்கள். 15வது நிதி கமிஷன் அமைக்கப்பட்டபோது, அறிக்கை ஒன்றை வெளியிட்ட அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய முதலமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். பத்து மாநில முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதினார்கள்.

**இன்றைக்கு பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அப்போது என்ன சொன்னார் தெரியுமா? “மத்திய அரசுக்கு அதிகமான அளவு வருவாயை கொடுக்கும் மாநிலங்களாக தென் இந்திய மாநிலங்கள் உள்ளது. ஆனால் வட மாநிலங்களின் வளர்ச்சிக்கு மட்டுமே அவை பயன்படுத்தப்படுகின்றன” எனக் குற்றம்சாட்டினார். இப்போது அவர் இதனை வெளிப்படையாகச் சொல்வாரா எனத் தெரியாது. இதனை ‘அற்பத்தனம்’ என்பாரா பியூஸ் கோயல்?**

**“குஜராத் மக்கள் ரூ.60 ஆயிரம் கோடியை டெல்லிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திரும்ப வருவது மிகக் குறைவு. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?” என்று 6.12.2012 அன்று குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது கேட்டவர் தான் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள். மோடி அன்று கேட்டது அற்பத்தனமான கோரிக்கையா?**

●●

## மணிப்பூரில் நடந்த இனக் கலவரத்திற்கு

# பிரதமரும் உள்துறை அமைச்சரும் பொறுப்பேற்க வேண்டும்!

## நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அறிக்கை!

**சென்னை, பிப். 12 -**

**“மணிப்பூரில் நடைபெற்ற இனக் கலவரத்திற்கு பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பொறுப்பேற்க வேண்டும்” என்று நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த இரண்டு ஆண்டுகாலமாக மணிப்பூரில் கும்பல் வன்முறைகளைத் தூண்டிவிட்டு, ஏராளமான மனித உயிரிழப்புகளுக்கு காரணமாக இருந்த பிரேன் சிங் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

குறிப்பாக மணிப்பூர் கலவரத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்புள்ள முதலமைச்சர், அதற்கு மாறாக கும்பல் வன்முறையைத் தூண்டிவிட்டு நடத்தினார் என்பதற்கான சாட்சியங்கள் உச்ச நீதிமன்ற விசாரணையில் வெளிப்பட்டுள்ளன. சிறுபான்மைப் பிரிவினர் மீது வெறுப்புணர்வோடு



பேசிய ஒலிப்பதிவு அம்பலப்பட்டு, அதன் உண்மைத்தன்மை வெளிப்பட்டுள்ள நிலையில் பிரேன்சிங் பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

**எதிர்க்கட்சிகள் அழுத்தம்!**

பிரேன் சிங் முதல்வராக தொடர எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. கூட்டணி கட்சியினரும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் தந்த அழுத்தமும் இந்த பதவி விலகலுக்கு காரணமாகியிருக்கின்றன.

மணிப்பூர் கலவரங்கள் தொடங்கியது முதலே பிரேன் சிங் பதவி விலக வேண்டும், மோடியும் அமித்சாவும் மணிப்பூரில் இயல்பு நிலை திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வைத்த கோரிக்கைகள் புறந்தள்ளப்பட்டன. மணிப்பூர் மக்கள் மிகப் பெரிய துயரத்திற்கு ஆளாகி வந்தார்கள். தற்போதும் நிலை மேம்பட்டதாகத் தெரியவில்லை.

மணிப்பூரில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் 220க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன, 60,000 க்கு மேற்பட்ட மக்கள் மாநிலத்தை விட்டு புலம்பெயர்ந்த அவலம் ஏற்பட்டது. அரசின் நிவாரண முகாம்களில் தங்கியிருந்தவர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள், பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளானார்கள். அரசின் ஆதரவிலும் பாராமுகத்திலும்தான் இந்த கொடுமைகள் அரங்கேற்றப்பட்டன. அப்போதும் ஒன்றிய பா.ஜ.க. அரசும், மணிப்பூர் பா.ஜ.க. முதல்வர் பிரேன் சிங்கும் வேடிக்கைத்தான் பார்த்தார்கள்.

மக்களை பிளவுபடுத்தி அவர்களின் மரணத்தின் மீது ஆட்சி செய்யும் பா.ஜ.க.வின் பாசிச அரசியலுக்கு மணிப்பூரே சாட்சி. பிரேன் சிங் மட்டுமல்ல அவரை பாதுகாத்து கலவரத்தை கட்டுப்படுத்த தவறிய பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித்சாவும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

அடுத்து யார் முதல்வராக பதவி ஏற்றாலும் அவர்கள் அந்த மாநிலத்தில் மீண்டும் அமைதி திரும்புவதை உறுதி செய்ய வேண்டும்.

**தனி விசாரணை ஆணையம் தேவை!**

இனியாவது பா.ஜ.க. அரசு திருந்தி மணிப்பூர் மக்களிடம் அமைதியும் நிம்மதியும் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மணிப்பூரில் நிகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களை விசாரிக்க நடுநிலையான தனி ஆணையத்தை அமைக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## கார்ப்பரேட்களுக்கான பட்ஜெட் இது! வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது!

# ஒன்றிய பட்ஜெட்டில் 98.25 சதவிகித இந்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்!

## மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் பேச்சு!

**புதுடெல்லி, பிப்.12 -**

**ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் 98.25 சதவிகித இந்தியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்றும், இந்த பட்ஜெட் கார்ப்பரேட்களுக்கான பட்ஜெட் என்றும், வேலைவாய்ப்பு திண்டாட்டத்தை போக்க இந்த பட்ஜெட்டில் திட்டங்கள் எதுவுமில்லை என்றும் மக்களவையில் ஒன்றிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கழக மக்களவை குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை எடுத்துக் கூறி உரையாற்றினார்.**

**மக்களவையில் தயாநிதி மாறன் பேசியதாவது:-**

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 3வது பதவிக்காலத்தின் முதல் முழு ஆண்டு பட்ஜெட் மீண்டும் சாமானியர்களை விட கார்ப்பரேட்டுகளுக்கு மட்டுமே சாதகமாக உள்ளது. மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் 8 சதவீத வளர்ச்சிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதனால் இந்தியாவின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கக் கூடிய அனைத்தையும் நீங்கள் பெற்றிருந்தீர்கள். அதற்குப் பதிலாக எங்களுக்குக் கிடைத்தது, வெற்று வாக்குறுதிகள் மற்றும் பக்கச்சார்பான வரவு செலவுத் திட்டங்கள்தான்.

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 87.35 ஆக சரிந்துள்ளது. 2025 ஜனவரியில் மட்டும் ரூ.70 ஆயிரம் கோடி அன்னிய முதலீடுகள் இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளன. இது ஒரு மாதக் கதைதான். எதிர்க்கட்சிகள் இதைப்பற்றி எல்லாம் பேசும் போது நிதியமைச்சர் அவையில் இல்லாமல் போய்விடுகிறார். அப்படியானால், அவர் பதிலளிக்கும்போது நாங்களும் புறக்கணிப்போம்.

**டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு சரிவு!**

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, மன்மோகன்சிங் ஆட்சிக்காலத்தில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு ரூ.68ஆக இருந்த போது, இன்றைய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மன்மோகன்சிங் அரசை ராஜினாமா செய்யக் கோரி பேட்டியளித்தார். இப்போது 87.5 ஆக உள்ளது. இப்போது நீங்கள் ராஜினாமா செய்வீர்களா அல்லது நீங்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்க வேண்டுமா?

வேலையில்லா திண்டாட்டத்தை தீர்க்க இந்த பட்ஜெட்டில் எதுவுமில்லை. வேலைவாய்ப்பை உருவாக்குவது காலத்தின் தேவை, ஆனால் 2.5 கோடி பேர் வேலையில்லாமல் இருந்தாலும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான பெரிய முயற்சிகள் எதுவும் இல்லை. இந்தியாவின் ஏற்றுமதியில் 45% வழங்கும், 7.5 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் சிறுகுறு தொழில் நிறுவனங்கள் இந்த பட்ஜெட்டில் இருந்து வரி விலக்கு அல்லது ஆதரவைப் பெறவில்லை. ஆண்டுதோறும் 6070 லட்சம் இளைஞர்கள் வேலைதேடும் சந்தையில் நுழைகிறார்கள், ஆனால் அவர்களின் வேலைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை. அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும் விற்கப்பட்டுவிட்டன அல்லது விற்கப்படும் நிலையில் உள்ளன. முன்னதாக அவற்றை எங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க அவற்றைப் பயன்படுத்தினோம். இப்போது அதுவும் உங்கள் கையில் இல்லை, எங்கள்



இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க அம்பானிகளிடமும், அதானிகளிடமும், டாடாக்களிடமும் நாங்கள் கெஞ்ச வேண்டும்.

**பெட்ரோலில் பெரும் லாபம்!**

பெட்ரோல் விலையில் நீங்கள் பெரும் லாபம் ஈட்டியுள்ளீர்கள். கொரோனா காலத்தில் கூட உலகம் முழுவதும், சந்தை விலை குறைவாக இருந்த போது எரிபொருளின் மீதான வரிகள் மற்றும் கலால் வரிகளின் மூலம் அரசாங்கம் அதிக லாபம் ஈட்டியுள்ளது. 2019-20ல் உங்கள் கருவூலத்திற்கு பெட்ரோலியத் துறையின் மொத்த பங்களிப்பு ரூ.5,55,370 கோடி, 2020-21 ரூ.6,72,718 கோடி, 2021-22ல் ரூ.7,74,425 கோடி, 2022-23ல் ரூ.7,48,718 கோடி, 2023-24ல் ரூ.7,51,155.9 கோடி, 2024-25-ல் கடந்த 6 மாதங்களில் மட்டும் ரூ.3,39,185.5 கோடி.

உக்ரைன் போர் தொடங்கிய போது, ரஷ்யாவின் சந்தை விலையான 120 டாலருக்கு பதில் 60 டாலருக்கு எரிபொருளை விற்றுக்கொண்டிருந்தபோது, நீங்கள் ரிலையன்ஸ் நிறுவனங்களை எதிர்பாராத லாபத்தைப் பெற அனுமதித்தீர்கள், உங்கள் நண்பர்கள் அனைவரையும் லாபம் ஈட்ட அனுமதித்தீர்கள். ஆனால் 50% குறைப்பு பலனை நீங்கள் சாமானியர்களுக்கு வழங்கியிருக்கலாம். இந்த பட்ஜெட் பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே சாதகமாக உள்ளது. இது மக்கள் விரோத, தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானாவுக்கு எதிரான மற்றும் ஒட்டுமொத்த இந்தியாவின் 98% மக்கள்தொகைக்கு எதிரானது. எனவே நிதியமைச்சர் இன்னும் நேர்மறையாக இருக்க வேண்டும். ஒட்டு மொத்த இந்தியாவுக்கான பட்ஜெட் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**எத்தனை நதிகளை இணைத்தீர்கள்?**

2019ல் ஜல் சக்தி என்ற புதிய அமைச்சகத்தை உருவாக்கியது. நதிகளை இணைப்பதற்காகவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் வறட்சி அல்லது வெள்ளம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக மறுபெயரிடுகிறீர்கள் என்று சொன்னீர்கள். வருடங்கள் ஆகிவிட்டது. எத்தனை நதிகளை இணைத்தீர்கள், எத்தனை வெள்ளத்தை தடுத்தீர்கள்?

**பீகாருக்கு அதிக திட்டங்கள்!**

பீகார் தேர்தலை முன்னிட்டு அங்கு அதிக திட்டங்களை அறிவித்துள்ளனர். ஆனால் தென் மாநிலங்களை நியாயமற்ற முறையில் நடத்துகிறார்கள். தமிழ்நாடு மற்றும் கேரளாவில் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளதால், அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் போனஸ் அல்லது மாயாஜால அறிவிப்பை பார்க்கலாம். கன்னியாகுமரி திருவனந்தபுரம் தொழில் வழித்தடம் மீண்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. பெங்களூரு, சென்னை, ஐதராபாத் போன்ற தகவல் தொழில்நுட்ப மையங்கள் பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்தாலும், அவர்களுக்கு எந்த சலுகையும் இல்லை.

தமிழகத்திற்கு எதிரான பாகுபாடு கடந்த வாரத்தில், தமிழக மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சுமார் ரூ.2,000 கோடியை மத்திய அரசு எடுத்துக்கொண்டு மற்ற மாநிலங்களுக்கு திருப்பியளித்துள்ளது. மாணவர்களைத் தண்டிக்கும் ஒன்றிய அரசு பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறோம். எங்கள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். எங்கள் மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வோம். எங்கள் சொந்த நிதியில் அவர்களுக்கு ஆதரவளிப்போம். இந்தியாவிலேயே திராவிட மாடல் அடிப்படையில் வெற்றி பெற்ற மாநிலம் தமிழ்நாடு’ என்றார்.

**தமிழ்நாடு முதல்வராக முயன்றது போல் பெரிய பதவிக்கு முயற்சிக்கிறார் நிர்மலா!**

இன்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இவ்வளவு உயரங்களை எட்டியிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் பெண்கள் கல்வி கற்கும் பெரியார் என்ற ஒரு மனிதனால்தான். அதை அவர் மறக்கவே கூடாது. 2017 ஆம் ஆண்டு, ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அவர் தமிழ்நாட்டில் இருந்தார். முதல்வராகலாம் என்று நினைத்து, அந்த பதவிக்காக ஏங்கிக் கொண்டிருந்ததால், இந்த ஆண்டு நீட் வராது, இந்த ஆண்டு தமிழகத்துக்கு நீட் விலக்கு என்று கூறினார்.

அனைத்து மாணவர்களும் நம்பினர். ஆனால் நாங்கள் நம்பவில்லை. ஏனென்றால் அவர் சொன்னது நிறைவேறாது என்று எங்களுக்குத் தெரியும். எங்கள் மக்களை கவர, அவர் முயற்சித்தார். அதேபோன்று அவர் இப்போது ஒரு பெரிய பதவிக்காக முயற்சி செய்து இருக்கிறார். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் நாங்கள் அவரை வாழ்த்துகிறோம்.

இந்தியாவின் மக்கள் தொகை 140 கோடி. 2023-24ல் 8 கோடி பேர் (5.7%) மட்டுமே வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்துள்ளனர். இவர்கள்தான் நேரடி வரி செலுத்துபவர்கள். அவர்களில் 4.15 கோடி பேர் மாதம் ரூ.50,000க்கும் குறைவாகவே சம்பாதிக்கிறார்கள். 1.5 கோடி பேர் மாதத்திற்கு ரூ.1 லட்சத்துக்கு மேல் சம்பாதிப்பதால், வரிச் சலுகைக்கு அவர்கள் தகுதி பெறவில்லை. இதனால் பயன்பெறும் 2.5 கோடி பேர் மட்டுமே எஞ்சியுள்ளனர். இது மக்கள் தொகையில் 1.75% மட்டுமே. இந்த நடவடிக்கை டெல்லியில் பாஜ வாக்குகளைப் பெற உதவியது. இது ஒரு குறுகிய கால இனிப்பு. நிலையான தீர்வு அல்ல. ஆனால் வளர்ச்சி தேக்கமடைந்தால், விலைவாசி உயர்ந்துள்ளதால் அவர்களுக்கும் இதில் எந்த பலனும் இல்லை. எஞ்சிய 98.25% இந்தியர்களுக்கு 12 லட்சம் வருமான வரிச் சலுகையால் எந்த லாபமும் இல்லை. இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் மறைமுக வரிகள் மூலம் அதிகளவில் செலுத்துகிறார்கள்.

இவ்வாறு தயாநிதி மாறன் உரையாற்றினார்.